அனுப்புநர்
திரு. உ. சுப்பிரமணியன், பி.இ.,
செயற்பொறியாளர் பொபது.,நீஆஅ.,
கோதையாறு வடிநில கோட்டம்,
நாகர்கோவில்

பொபது.,நீஆஅ
பெறுநர்
Dr. அபினா ஜாபர் அலி,
D/o. ஜாபர் அலி,
122, தெற்குபுதுத்தெரு,
பிள்ளையார்கோவில் சமீபம்,
இடலாக்குடி, கோட்டார் அஞ்சல்.



க.எண்: வ4 / பா – 1 - 6 / 584 / 11 நாள் : 30.5.2011

ஐயா,

பொருள் : பாலம் அமைக்க அனுமதி – சம்மந்தமாக.

பார்வை : 1. தங்கள் கடித நாள் : 20.5.2011
2. உதவி செயற்பொறியாளர், நாகர்கோவில் கடித எண். வப. / கோ. 73 B / 1304 / 11 நாள் : 26.05.2011.

*****

பார்வையில் கண்ட தங்கள் கடிதத்தில் கேட்டுள்ளபடி நாஞ்சில்நாடு புத்தனார் கால்வாயில் 12.800 கி.மீ –ல் கால்வாயின் இடது பக்கம் அமைந்துள்ள தென்னந்தோப்பிற்கு செல்ல நாஞ்சில்நாடு புத்தனார் கால்வாயின் குறுக்கே தங்கள் சொந்த செலவில் பாலம் கட்ட உதவி செயற்பொறியாளர், பழையாறு வடிநில உபகோட்டம், நாகர்கோவில் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. பாலத்தின் கால்வாயின் நீளம் 13.80 மீ. குறையாமலும், உயரம் கால்வாயின் அடிமட்டத்திலிருந்து 4.6 மீ. குறையாமலும் இருக்க வேண்டும்.
2. பாலம் ஐ.ஆர்.சி. தரத்தின்படி பொதுப்பணித்துறை பொறியாளர்களின் முன்னிலையில் அவர்களின் அறிவுரைப்படி கட்டப்படவேண்டும்.
3. பாலம் சானலில் தண்ணீர் போக்கிற்கு எவ்வித இடையூம் ஏற்படாத வண்ணம் கட்டப்படவேண்டும்.
4. சானலினுள் தூண்கள் எதுவும் நிறுவக்கூடாது.
5. பாலம் கட்டும் போது சானலின் கரைகளுக்கோ, கட்டுமானங்களுக்கோ சேதம் ஏற்படக்கூடாது. சேதம் ஏற்பட்டால் அதனை தங்கள் சொந்த செலவில் சரி செய்து தர வேண்டும்.
6. பாலம் தங்கள் சொந்த செலவில் கட்டுவதால் பிற்காலத்தில் பராமரிப்பு வேலைகளும் தங்களை சார்ந்ததாகும். மேலும் இப்பாலத்தை பொதுமக்களும் பயன்படுத்தும் வகையில் அனுமதிக்கவேண்டும். தனி உரிமை கோரக்கூடாது.
7. பாலம் கட்டும் போது கால்வாயினுள் விழும் கல், மண் மற்றும் இதரப் பொருட்கள் அனைத்தும் உடனுக்குடன் தங்களது சொந்தசெலவில் அப்பறப்படுத்தப்படவேண்டும்.
8. பிற்காலத்தில் கால்வாய் முன்னேற்ற பணிகளுக்கு பாலம் இடையூறாக இருப்பின் பாலத்தை அகற்ற இத்துறைக்கு உரிமை உண்டு.
9. பாலம் வேலைகள் நடப்பாண்டு தண்ணீர் அடைப்பு காலமான மார்ச் முதல் மே வரையுள்ள காலத்தில் கட்டி முடிக்கப்படவேண்டும்.
10. பாலம் வேலை ஆரம்பிக்கும் முன்னர் குறிப்பிட்ட பகுதியை எல்கை நிர்ணயம் செய்து உதவி பொறியாளரின் ஒப்புதல் பெற்று பணி ஆரம்பிக்க வேண்டும். பாலம் வேலை ஆரம்பிக்கும் முன் உதவி பொறியாளர் பொ.ப.து.,நீ.ஆ.அ., பாசன பிரிவு, மைலாடி மற்றும் உதவி செயற்பொறியாளர் பொ.ப.து.,நீ.ஆ.அ., பழையாறு வடிநில உபகோட்டம், நாகர்கோவில் ஆகியோருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

30/5/11

செயற்பொறியாளர் பொபது./நீஆஅ.,
கோதையாறு வடிநிலக் கோட்டம்,
நாகர்கோவில்.

26/5/11